# குடிமகனின் அடிப்படை உரிமையா? சட்டமன்ற உரிமையா?

புலவர் கா. கோவிந்தன்

எழிலகம்
திருவத்திபுரம்,
சம்புவராயர் மாவட்டம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# குடிமகனின் அடிப்படை உரிமையா? சட்டமன்ற உரிமையா?

புலவர். கா. கோவிந்தன்

எழிலகம்
திருவத்திபுரம்
சம்புவராயர் மாவட்டம்

பதிப்பாண்டு : 1990

அச்சிட்டோர் :

வெற்றி அச்சகம்
91, டாக்டர் பெசன்ட் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை-600 014.

# முன்னுரை

தமிழக முதல்வராக 1938ஆம் ஆண்டில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த போது, தமிழ்நாட்டு மாணவர்கள் இந்தியைக் கட்டாய மாகப் படிக்க வேண்டும் எனச் சட்டம் கொண்டுவந்த அந்த நாள் தொடங்கி, கழகம் மேற்கொண்டு வந்த, வரும், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் ஒரு கட்ட மாக 5-12-86 அன்று, ‘‘தேவநாகரி வடிவில் அமைந்த இந்திதான், இந்தியாவின் ஆட்சிமொழி’’ என்ற தொடர் அடங்கிய, இந்திய அரசியல் சட்டம் 343/1 பிரிவு நகலைத் தீயிட்டுக் கொளுத்தியதற்காகத் தமிழகத்தில் பல்லாயிரம் கழகத் தோழர்கள், பல்வேறு மத்திய சிறை களில் அடைக்கப்பட்டார்கள்.

அவ்வாறு அடைக்கப்பட்டவர்களுள், வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டவர்களுள், நானும் ஒருவன்; அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர், திரு. V. K. இராஜு அவர்களும் ஒருவர். நாங்கள் சிறையில் இருக்கும்போது 22-12-86 இல் நடைபெற்ற சட்டமன்ற நிகழ்ச்சியில், தேசீய அவமதிப்புத் திருத்தச் சட்டப் பிரிவின் கீழ் பேராசிரியர் உள்ளிட்ட பத்து சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டனர். அவ்வாறு பதவி இறக்கம் செய்யப்பட்ட சட்டமன்ற

உறுப்பினர்கள் பதின்மரில் என்னோடு சிறையில் இருந்த திரு. V. K. இராஜுவும் ஒருவர்.

இந்நிலையில், விசாரணைக்காகச் செய்யாறு தோழர்கள் வேலூர் மத்திய சிறையிலிருந்து செய்யாறு நடுவர் மன்றத்திற்குக் கொண்டுவரப்பெற்று விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது 8-1-87 அன்று மயக்கம் போட்டு விழுந்து விட்டேன் என்ற காரணம் காட்டி என்னை மட்டும் காவல்துறைக் காவலரோடு வேலூர் மாவட்ட மருத்துவமனையில் சேர்த்துவிட்டனர்.

அவ்வாறு, வேலூர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தபோது சட்டமன்றத் தீர்மானம் அரசியல் சட்டத்திற்கும், தமிழ்நாடு சட்டமன்ற விதிமுறை களுக்கும் முற்றிலும் முரணானது என்பதை விளக்கி வேலூர் தினகரனிலும், அதைத் தொடர்ந்து சென்னை முரசொலி 22-1-87, 6-2-87 7-2-87 8-2-87 மற்றும் 9-2-87 நாளிட்ட இதழ்களிலும் தொடர்ந்து எழுதி வந்தேன். அக்கட்டுரைகளின் தொகுப்பே இச்சிறு நூல். இதுகாணும் அரசியல் நிர்ணயச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சட்ட மன்ற விதிகள் ஆகியவற்றில் வல்லுநர்கள் தங்கள் கருத்தினைத் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

அன்புள்ள

கா. கோவிந்தன்

# அவசரக் கூட்டமும் சட்ட மன்றத் தீர்மானமும்

இந்தி ஆதிக்க எதிர்ப்பு போராட்டத்தின் ஒரு கட்டமாக, இந்தியை, இந்தியாவின் ஆட்சி மொழியாக்கும் அரசியல் சட்டத்தின் பிரிவைக் கொளுத்தியது அரசியல் சட்டத்தை அவமதித்ததாகும். அரசியல் சட்டத்தை மதிப்போம் என உறுதி மொழி எடுத்துக் கொண்டு சட்ட மன்ற உறுப்பினர் ஆனவர்களின் இச்செயல் சட்டமன்ற மரபை மீறியதாகும் என்று கூறி 24-11-86-ஆம்தேதியன்று பேராசிரியர் உள்ளிட்ட 7 சட்ட மன்ற உறுப்பினர்களின் பதவிகளைப் பறித்து தீர்ப்பளித்து விட்டார் சபாநாயகர்.

சபாநாயகரின் செயல் சட்ட மரபுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது என சட்ட வல்லுநர்கள் அனைவரும் ஒருமித்த கருத்து வெளியிட்டு அவர் செயலைக் கண்டித்தனர். சட்டத்தை எரித்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தகுதியை இழந்து விட்டனர் என சபாநாயகர் தீர்ப்பு அளித்துவிட்ட பின்னரும் திரு. மதுராந்தகம் ஆறுமுகம், திரு. ஆபிரகாம், திரு. அரக்கோணம் வி. கே. ராஜு ஆகிய 3 சட்ட மன்ற உறுப்பினர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி என்ற சொற்றொடர் அச்சிட்டகாகிதத்தைக்கொளுத்தி, பேராசிரியர் உள்ளிட்ட அந்த 7 பேரைப் போலவே கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டனர்.

இந்த 3 பேர் செயல் சபாநாயகர் தீர்ப்புக்கும் 22-12-86-க்கும் இடையில் நடைபெற்றதாகும்.

சட்ட மன்றம் தொடர்பான தீர்ப்பு வழங்கும் அதிகாரம் சபாநாயகருக்கு சட்டசபை நடந்து கொண்டிருக்கும் நாட்களில் மட்டுமே அல்லாது அது நடைபெறாத நாட்களிலும் உண்டு.

ஆகவே பேராசிரியர் உள்ளிட்ட 7 உறுப்பினர் பதவியை பறித்து உத்தரவிட்டது போல, திரு. ஆறுமுகம் உள்ளிட்ட இந்த 3 பேர் பதவிகளையும் பறித்து உத்தரவு பிறப்பித்திருக்கலாம். ஆனால் அது செய்யப்படவில்லை.

அதற்கு மாறாக 22—12—86 அன்று சட்டசபையில் அவசர கூட்டத்தை கூட்டி பேராசிரியர் உள்ளிட்ட அந்த 7 பேரோடு திரு. ஆறுமுகம், அரக்கோணம் ராஜு உள்ளிட்ட 3 பேரையும் சேர்த்து 10 பேர்களின் பதவி பறிக்கப்பட்டது. அது அந்த 7 பேர் பதவியைப் பறித்த சபாநாயகர் உத்தரவு போல் அல்லாமல் சட்டமன்ற தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியில்தான் ஒரு சிக்கல். சபாநாயகர் உத்தரவுப்படி பேராசிரியர் உள்ளிட்ட அந்த 7 பேர் 22—12—86 அன்று சட்ட மன்ற உறுப்பினர் பதவியை இழந்து விட்டதாகக் கொள்ளலாம். ஆனால் திரு. ஆறுமுகம், திரு. ஆபிரகாம், திரு. வி.கே. ராஜு இவர்களைப் பற்றி சபாநாயகர் பதவி இழப்பு தீர்ப்பு வழங்காமையால் அவர்கள் 22—12—86 வரை சட்டமன்ற உறுப்பினர்கள் தான். 22—12—86 சட்ட மன்ற கூட்டத்தில் கலந்து கொள்ளும் முழு உரிமை பெற்றவர்கள். ஆனால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு அளிக்கவில்லை. அவர்களுக்கு அந்த வாய்ப்பு கட்டாயமாக அளிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

சட்டசபை கூட்டம், அதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்புவது குறித்து அரசியல் அமைப்பு சட்டம் 208(1)பிரிவின்படி இயற்றப்பட்ட தமிழ்நாடுசட்டமன்றப் பேரவை விதிகள் என்ன கூறுகின்றன.

அதிகாரம்: 2: விதி 3 பேரவை கூட்டுதல் பற்றிக் கூறுகிறது. அது வருமாறு:—

(அ) பேரவை ஆளுநர் கூட்டும்போதெல்லாம் பேரவைக் கூட்டத்துக்கான நாள், நேரம், இடம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அறிவிப்பு ஒன்றினை அரசிதழில் வெளியிட வேண்டும்.

(ஆ) செயலாளர் ஒவ்வொரு உறுப்பினர்க்கும் பேரவைக் கூட்டத்திற்கென குறிக்கப்பெற்ற நாள்,நேரம், இடம் ஆகியவற்றை அறிவிக்க வேண்டும்.

மேலும் பேரவைக் கூட்டம் குறுகிய முன்னறிவிப்புடனோ அல்லது அவசரமாகவோ கூட்டப் பெறின், ஒவ்வொரு உறுப்பினர்க்கும் தனித்தனியே அழைப்பாணைகள் அனுப்பப் பெற வேண்டுவதில்லை. ஆனால் கூடும் நாள், இடம் ஆகியவற்றை அரசிதழிலும் செய்தித்தாள்களிலும் வெளியிட வேண்டும். மேலும் உறுப்பினர்களுக்கு தந்தி மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ தெரிவிப்பதோடு வானொலி வாயிலாகவும் தெரிவிக்க வேண்டும்.

இதில் குறுகிய முன்னறிவிப்பு கூட்டம் அல்லது அவசரக் கூட்டத்துக்கான அழைப்பு அரசிதழிலும் செய்தி தாள்களிலும் வெளியிட வேண்டும் என கூறியதோடு நில்லாமல் உறுப்பினர்களுக்குத்தந்தி மூலமாகவோ

அல்லது வேறு வகையிலோ தெரிவிக்க வேண்டும் "Shall be informed" என்று வலியுறுத்தப்பட்டு உள்ளது.

திரு. மதுராந்தகம் ஆறுமுகம், ஆபிரகாம், வி.கே. ராஜு ஆகியோர் அந்த தேதிக்கு முன்பிருந்தே சிறையில் அடைக்கப்பட்டு இருந்தனர். சிறை கைதிகளுக்கு செய்தி தாள்கள் வழங்கப்படுவது இல்லை. வானொலி வசதியும் இல்லை.

ஒரு உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டின் பேரில் அல்லது ஒரு குற்றம் செய்ததற்காக கைது செய்யப்பெற்றாலும் அல்லது இந்தியாவின் எந்த பகுதியிலும் உள்ள ஒரு நீதி மன்றத்தினால் சிறை தண்டனை விதிக்கப் பெற்றாலும் அல்லது மத்திய அல்லது மாநில அரசின் நிர்வாக ஆணைப்படி காவலில் வைக்கப் பெற்றாலும் தண்டிக்கும் நீதிபதி, குற்ற இயல் நீதிபதி (மாஜிஸ்திரேட்) அல்லது நிர்வாக அதிகாரி அது பற்றிய செய்தியை பேரவைத் தலைவருக்கு உடனே தெரிவிக்க வேண்டும். அதில் முறையே கைது செய்ததற்கு அல்லது காவலில் வைத்திருப்பதற்கு அல்லது தண்டித்ததற்கு காரணங்களையும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

மேலும் அவ்வுறுப்பினர் எவ்விடத்தில் காவலில் வைக்கப் பெற்று உள்ளார் என்கிற விவரத்தையும் பேரவை தலைவரால் வரையறுக்கப் பெற்றுள்ள பொருத்தமான படிவங்களில் (இணைப்பு 'அ மற்றும் ஆ) தெரிவிக்க வேண்டும் என்ற தமிழ்நாடு சட்ட மன்ற பேரவை விதி 314-இன்படி அந்த 3 பேரில் திரு. ஆறுமுகம் அவர்களும், திரு. ஆபிரகாம் அவர்களும், சென்னை மத்திய சிறையிலும், திரு வி.கே. ராஜு வேலூர் மத்திய சிறையிலும் அடைக்கப்படும் செய்தி அன்றன்றே சபா

நாயகருக்கு நீதிபதிகளாலும் சிறை அதிகாரிகளாலும் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளுக்கு செய்திதாள் கிடைக்க வாய்ப்பு இல்லை. இந்த நிலையில் விதி 3 (அ)வின்படி வெளியிடப்பட்ட அரசிதழ்களோ (ஆ) 2-வது பத்தியின்படி கொடுக்கப்பட வேண்டிய தந்திகளோ அந்தந்த சிறை கண்காணிப்பாளர் அல்லது சிறை அதிகாரி மூலம் அந்த 3 உறுப்பினர்களுக்கும் அனுப்பப் பெற்றிருக்க வேண்டும்,

ஆனால் வேலூர் மத்திய சிறையில் இருந்த திரு வி. கே. ராஜு அவர்களுக்கு அரசிதழோ தந்தியோ அனுப்பப் பெறவில்லை என்பது உறுதி.

234 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்ட மன்றத்தில் ஒரு உறுப்பினர்க்கு ஒரு கூட்டத்தொடர் நடைபெறுவதையே அறிவிக்காமல் சட்ட மன்றத்தை கூட்டுவது முறையாகாது. அவ்வாறு கூட்டிய கூட்டம் தமிழ்நாடு சட்ட மன்ற விதிகளின்படி முறையாக கூட்டப்படாத கூட்டம் ஆகும்.

அக்கூட்டம் சட்டப்படி செல்லுபடியாகாத கூட்டம், அக்கூட்டமே செல்லுபடியாகாத கூட்டம் என்றால் அக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகளோ தீர்மானங்களோ செல்லுபடி ஆகாதவை என்பதை சொல்லத் தேவையில்லை.

சட்டப்பேரவை கூடும்போது, பேரவை கூடும் நாள், காலம், இடம் ஆகியவை பற்றிய விளக்கம், ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினர்க்கும் அறிவிக்க வேண்டியது இன்றியமையாதது. அத்தகைய அறிவிப்பு, தனி ஒரு உறுப்பினர்க்கு அனுப்பப் பெறவில்லையாயினும், அந் நிலையில் கூட்டப் பெறும் சட்ட பேரவைக் கூட்டம் செல்லுபடி ஆகாத கூட்டம் ஆகும். அக்கூட்டத்தில் நடைபெறும் எந்த நிகழ்ச்சியும் நிறைவேற்றப்பட்ட எந்தத் தீர்மானமும் செல்லுபடி ஆகாதன ஆகும் என்பதைத் தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளை ஆதாரம் காட்டி முன்பே விளக்கி இருந்தேன்.

மேற்படி என் முடிவை உறுதி செய்யும் வலுவான ஆதாரங்கள் சிலவும் இருக்கின்றன; அவற்றை மக்கள் மன்றத்திற்குக் கொண்டு வருவது என் கடமை ஆகும்.

நாடாளுமன்ற நடைமுறை மரபுகளுக்கு வழிகாட்டி நூலாகக் கொள்ளப்படுவது, நாடாளு மன்றத்தில்— செயலாளர்களாகப் பல்லாண்டுகாலம் பணிபுரிந்து அத் துறையில் முதிர்ந்த அறிவு பெற்றவர்களாகிய திருவாளர்கள் எம். என். கவுல் என்பாரும், திருவாளர் எல்.எல். ஷக்தர் என்பாரும் எழுதிய "பாராளுமன்றத்தில் பழக்க வழக்கமும் நடைமுறை ஒழுங்கும்" (Practice and procedure of parliament) என்ற நூலாகும்.

அதில் பின்வரும் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

"செயலாளர் உறுப்பினர்களுக்குத் தனித்தனி அழைப்பாணை அனுப்புவார்"—"கூட்டம் நடைபெறுவதற்கு முடிவெடுத்த நாளுக்கும் கூட்டம் கூட்டப்பட வேண்டிய நாளுக்கும் இடையிலான காலம், மிகக் குறுகியதாக இருப்பின் அத்தொடர் கூட்டம் தொடங்கப் பெறுவதை உறுப்பினர்களுக்கு அறிவித்து விடலாம்; அழைப்பாணைகள் செய்தித்தாள்கள், வானொலி மற்றும் தந்திகள் மூலம் செய்யப்படவேண்டும்."

அழைப்பாணை அடங்கிய பதிவு அஞ்சல் உறை, ஓர் உறுப்பினர்க்கும் பட்டுவாடா செய்யப்படாமல் போய்விடுமாயின், அவ்வுறுப்பினரோடு தொடர்பு கொள்ளத்தக்க அவரின் தற்கால முகவரி சட்டமன்ற செயலகத்தவரால் கண்டுபிடிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அந்த முகவரிக்கு அழைப்பாணை அனுப்பப் பெற வேண்டும்."

"The secretary issues summons to members individually. Where the interval is very short, members may be informed about the commencement of the session and the issue of summons through press communique, over the radio and by telegrams.

Where a registered cover containing the summons is undelivered, efforts are made by the Secretariat to find out the current address at which ihe member could be contacted and the summons is issued to that address."

Page : 150

நம் பாராளுமன்றம் மற்றும் சட்ட மன்றங்களுக்கும் அவற்றின் உறுப்பினர்களுக்கும், அவற்றின் குழுக்களுக்கும் நம் அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் அதிகாரம்,

உரிமை சட்டக் காப்புரிமைகளை முறையை வகுத்துக் கூறும் அரசியல் சட்டத்தின் 105 மற்றும் 194 பிரிவுகளின் 3ஆம் பகுதியில் இவற்றில் கூறப்படாத அதிகாரம், உரிமைகள் தேவைப்படும்போதெல்லாம், உரிய சட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். அதுவரை இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றத்து மக்களவை விதிகளே பின்பற்றப்பட வேண்டும் என வரையறுத்து வைத்தார்கள் அரசியல் சட்டத்தை வகுத்துத் தந்த ஆன்றோர்கள்.

இந்தியப் பாராளுமன்ற நடைமுறைக்கு வழிகாட்டியாக மேற்கொள்ள வேண்டிய ஒன்று என அரசியல் நிர்ணய சபை ஆன்றோர்களால் மதிக்கப்பட்ட, இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றத்தின் வழிகாட்டி நூல் திருவாளர் எர்ஸ்கின்மே'' என்பார் எழுதிய பாராளுமன்றத்தின் சட்டம், உரிமைகள், நடைமுறைகள், பழக்க வழக்கங்கள் என்ற நூலாகும்.

(Erskine May's Treatise on The Law, Privileges Proceedings nnd usage of parliament)

அந்நூல், பாராளுமன்ற நிகழ்ச்சிகளில் உறுப்பினர்கள் பங்கு கொள்ள வேண்டிய உரிமை குறித்துப் பின் வருமாறு கூறுகிறது:

ஓர் உறுப்பினரை, அவையிலிருந்து வெளியேற்றும் ஆணை பிறப்பிப்பதற்கு முன்னர், அப்போது அவ்வுறுப்பினர் அவைக்கு வராதிருந்தால், அவைக்கு வந்து, அவர் இருக்கையில் இருந்து, தன்னுடைய முறையீட்டினை எடுத்துக் கூற வாய்ப்பு அளிக்கும் வகையில் அவைக்கு வருமாறு உத்தரவு பிறப்பிப்பது வழக்கமாகும்.

அவையில் இருக்க வேண்டும் என ஒரு உறுப்பினர்க்கு ஆணை பிறப்பித்துவிட்டால், அவையின் அந்த ஆணை அவருக்கு முறைப்படி கொண்டு சேர்க்கப்பட வேண்டும்; சேர்க்கப்படவில்லையேல், அதற்கான சான்று கொடுக்கப் பட வேண்டும்.

அந்த உறுப்பினர் சிறையில் அடைக்கப் பட்டிருந் தால், அந்த உறுப்பினர் அவை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பினால், தக்க பாதுகாப்போடு, அந்த உறுப்பினரை அவைக்குக் கொண்டு வருமாறு, சிறை அதிகாரிக்கு ஆணையிடுவது வழக்கமாம்.

ஏமாற்று மோசடிக் குற்றத்திற்கான சதியில் ஈடு பட்டார் என்பதற்காக, லார்டு கோக்ரன் என்பவர் தண்டிக்கப் பெற்று சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் பாராளுமன்ற கருத்துக்கு எதிராகவும், காவலர் துணையோடு அவைக்குக் கொண்டு வர அனுமதிக்கப் பட்டார். அதுமட்டுமல்லாமல் லார்டு கோக்ரன் அவை யில் தன்னுடைய இருக்கையில் இருந்து, தான் குற்றம் அற்றவர் என்று வாதிடவும் பேரவைத் தலைவர் விரும்பி அனுமதித்தார்.—பக்கம் 133

பொய்க் கையெழுத்திட்ட குற்றத்திற்காகத் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்ட பேக்கர் என்ற நாடாளுமன்ற உறுப்பினர்க்கு, அவைக்கு வருவதற்கான அழைப்பு அனுப்பப்பெறவில்லை. ஆயினும் அவரை அவையிலிருந்து நீக்குவதற்கான தீர்மானம் அவையில் கொண்டு வர இருக்கிறது. இது குறித்து ஏதேனும் எழுத வேண்டுமாயின் பேரவைத் தலைவருக்கு முறையிட்டுக் கொள்ளலாம் என்ற கடிதம் ஒன்று உள்துறைச் செயலாளர் மூலம் அவருக்கு அனுப்பப் பட்டது. அது குறித்து, அவைத் தலைவருக்கு எழுதிய

கடிதம், அவரை நீக்கும் தீர்மானம் நிறைவேறுவதற்கு முன்னர் அவைக்கு அறிவிக்கப்பட்டது.

### Issue of Summons

It is customary to order the Member if absent, to attend in his place before an order is made for his expulsion in order to give him an opportunity to vindicate himself.

Here an order has been made that a Member should attend in his place, service is made upon him of the order of the Houes for his attendance, or evidence furnished proving that service is impossible.

If he is in prison it has been the practice to order the goverior of the prison to bring him to the House, in custody, if he so desires to be brought.

Lord Cochrane imprisoned in the King's Bench forconspiracy to defraud (see p. 105) was brought to the bar by the marshal of the prison in deference to the order of the House. Lord Cochrane was desired bythe Speaker to take his place, whence he addressed the House in support of his innocence.

Mr. Baker, who was couvicted of forgery after pleading guilty was not ordered to attend, but was informed in a letter from the Home Secretary that a motion was to be made for his expulsion and that he could write to the Speaker in regard thereto, Mr. Baker's subsequent

letter to the speaker was communicated to the House before the motion for his expulsion was moved.

"The law, privileges, proceedings and usage of parliament."

by Ermskine May P. 133

பாராளுமன்ற உறுப்பினராகும் தகுதியை இழந்து விட்டவர் எனக் கருதப்பட்டவர்களுக்கும், அவர்களைப் பதவி இழக்கப் பண்ணும் தீர்மானம் அவையில் நிறைவேறுவதற்கு முன்னர், அவர்கள் அவைக்கு வரவும், வந்து தம்பதவி இழப்புத் தீர்மானம் நிறைவேற்றப்படக் கூடாது என்பதற்கான காரண காரியங்களைக் கூறி வாதிடவும் வாய்ப்பளிக்கும், இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றத்து உயர்ந்த மரபுதான் என்னே!

ஆனால் இங்கோ, சட்ட மன்ற உறுப்பினராக முழுத் தகுதியோடிருப்பவர்களுக்குச் சட்டமன்றம் நடைபெறுவதற்கான அழைப்பாணை கூட அனுப்பாமல், அவர்களின் பதவி இழப்புத் திர்மானம் நிறைவேற்றப்படுகிறது. என்னே நம் பாராளுமன்ற மரபு!

தண்டனை பெற்ற கைதியாகச் சிறையில் இருக்கும் ஒரு சட்ட மன்ற உறுப்பினர்க்கு, சட்டப் பேரவைச் செயலகத்தோடும், பேரவைத் தலைவரோடும், கடிதத் தொடர்பு கொள்ள உரிமை உண்டா என்ற கேள்வி எழுந்தபோது, சென்னை உயர்நீதிமன்றம் பின்வரும் தீர்ப்பினை வழங்கியிருப்பதையும் திருவாளர் கவுல் அவர்கள், தம்முடைய நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

தண்டனை பெற்ற ஒரு கைதி, தொடர்ந்து சட்ட மன்ற உறுப்பினராக இருந்து, அதற்கான சம்பளமும்

பெற்றுக் கொண்டு, சட்டப் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கான-அழைப்பையும்பெற்றுக்கொண்டு வரும்வரை, அவர் சட்டப்பேரவை செயலகத்தோடு கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளலாம். பேரவைத் தலைவருக்கும் உரிமைக் குழு தலைவருக்கும் முறையீடு செய்து கொள்ளலாம். அக்கடிதப் போக்குவரத்தினை எந்த அதிகாரியும் தடுத்து நிறுத்தக்கூடாது. இந்தஉரிமை "அய்யோ பாவம்" எனக் கருதிக் கொடுத்த நீதி (Natural Justice) அன்று. மாறாக, பேரவையில் தொடர்ந்திருக்கும் உறுப்பினர் என்ற உரிமையில் அரசியல் சட்டம், 194(3)ன் கீழ் உரிமை பெற்ற நீதி ஆகும்.

"த்தீர்ப்பினை எடுத்துக் காட்டியதோடு இன்றைய நிலையில், சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பே பின்பற்றத் தக்கதாம்" என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(தண்டனை பெற்ற கைதிகளுக்கே இந்த உரிமைகள் இருக்கும்போது, குற்றம் சாட்டப் பெற்று, விசாரணையில் உள்ளவர்க்கு, அவ்வுரிமைகள் உண்டு என்பதில் ஐயமே இல்லை.)

மேலும், தண்டனை பெற்ற கைதியாகச் சிறையில் இருக்கும் ஓர் உறுப்பினர், சட்டப்பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் உரிமை மட்டும் அல்லாமல், சிறையில் இருந்தவாறே சட்டமன்ற உறுப்பினர் பணிகளை ஆற்றும் உரிமையும் உண்டு என்றும் கூறி, அதற்கான உயர் நீதி மன்றத் தீர்ப்பு ஒன்றையும் எடுத்துக் காட்டியுள்ளார் திருவாளர் எம். என் கவுல் அவர்கள், "பாராளுமன்ற சட்டமன்றங்களும் அவற்றின் நிகழ்ச்சிகளும்" என்ற அவர் நூலின் 225, 226 பக்கங்களைக் காண்க.

சென்னை உயர்நீதி மன்றத்தின் இத்தீர்ப்பின் விளைவாக, தமிழ்நாடு அரசு, "சென்னைக் காவல் கைதிகள் விதிகள்.

1950"இல் "காவல் கைதிகளாகச் சிறையில் இருக்கும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தாம் உறுப்பினராக இருக்கும் அவைத்தலைவருக்கோ, அவைக் குழுவுக்கோ அனுப்பும் அனைத்துக் கடிதங்களையும் உறுப் பினர்களின் அவை உரிமைக்கு என்ற நடவடிக்கை அரசு எடுத்துக் கொள்ள வாய்ப்பு அளிக்கும் வகையில்,அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் எனச் சிறை அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கும் பிரிவைச் சேர்த்துக் கொண்டனர்" எனவும், அதே நூலில் கூறியுள்ளார்.

As long as a detenue continues to be a member of a legislature drawing the emoluments of his office, receiving summons to attend, he is entitled to the right of correspondence with the legislature and to make representations to the speaker, and the Chairman of the Committee of privileges and no executive authority has auy right to withheld such correspondence. This right, as it appears to us, not merely from principles of natural justice which will be violated by such letters being withheld, but as continuing member of the House, he would also appear to be entitled to this privilege under Art (194 (3) of the constitution.

As a sequel to the above quoted judgment, the Madras Government incorporated the following provisions in the Madras Security Prisoners Rules 1950.

"All communications addressed by a Security prisoner who is a member of the state Legislature or of parliament to the speaker or Chairman of the House of which he is a Member or to the chairman of a Committee (including a Committee of privileges) of such House, or of a Joint Committee of both Houses of the State Legislature or of parliament, as the case may be,

shall be immediately forwarded by the Superintendent of the Jail to the Government so as to be dealt with by them in accordance with the rights andprivileges of the prisoner as a Member of the House to which he belongs."

**But** for the time being the whole thing should proceed on the exposition of law made by the Madras High Court.

-Parliamentary Institutions and procee-dure-by M.N. Kaul, pages 225, 226

குற்றம் சாட்டப்பட்டு, விசாரணை நிலையில் சிறைக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சட்டப் பேரவைக் கூட்டத்திற்கான அழைப்பு அனுப்பப் பெற வேண்டும்; அவர்கள் விரும்பினால், போலீஸ் காவலோடு சட்ட மன்றத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். அங்கு அவர்களுக்குத் தங்கள் கருத்தினை அறிவிக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்கான ஆதாரங்களையும் தண்டனை பெற்ற நிலையிலும், சட்டமன்ற உறுப்பினர்க்கு சட்டப் பேரவைத் தலைவரோடும், செயலகத்தோடும் தொடர்பு கொள்ளும் அனுமதி அளிக்கவும் வேண்டும் என்பதற்கான ஆதாரங்களையும் எடுத்துவைக்கும் நிலையில் சிறையில் தண்டனைக் கைதியாக இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான எந்த உரிமையும் இல்லை என வாதிட கீழே கொடுக்கப்பட்டுள்ள சென்னை உயர்நீதி மன்ற, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளைக் காட்டி வாதிடக் கூடும்.

The English parliament claims no privilege for its members against preventive detention or against executive

order made under legislative authority. If no such privilege exists, or is claimed in the United Kingdom then it follows that no such privilege exists at the present moment in India. (A. I. R. 1952 Calcutta 632 A. I. R. 1951 Madras 269)

Once a member of Legislative Assembly is arrested lawfully detained, though without actual trial, under any Preventtve Detention Act, there can be no doubt that under the law as it stands, he cannot be permitted to attend the sittings of the House. (A. I. R. 1952 Madras 117)

In this context, the supreme court observed. Rights of a member of parliament to attend the session of parliament, to participate in the debate and to record his vote are not constitutional rights in the strict sense of the term and quite clearly, they are not fundamental rights at all... So far as a valid order of detention ir concerned. a member of parliament can claim no special status higher than that of an ordinary citizen (A. I. R. 1966 S. c. 657)

Practice & procedure of parliament — by M. N. Kaul and S. L. Shakdher page. 211

ஆனால் இத்தீர்ப்புகள் எல்லாம், நாட்டு நலனுக்குக் கேடுவிளைவதைத் தடுக்கும் எண்ணத்தோடு, பாதுகாப்புச்சட்டம் (Preventive Detentions Act) பொதுநலம் பராமரிப்புச் சட்டம் (Maintenance of public order Act) ஆகியவற்றின் கீழ்க் கைது செய்யப்பட்டவர்கள் மீது வழங்கப்பட்ட தீர்ப்புகள் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இதே தீர்ப்பில், அவ்வாறு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப் பட்டிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்க்குச் சட்ட மன்றம் செல்ல அனுமதி மறுக்கப்பட்டாலும். சட்டமன்ற கூட் டத்தில் கலந்துகொள்வதற்கான அழைப்புகள் அவருக் கும் அனுப்பப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கது.

(Preventive Detentions Act)

(Maintenance of public order Act)

In a case before the Madras High Court, a member of the Madras Legislative Assembly, who was in detention under the Maintenance of Pnblic Order Act, when he received the summons for a session of the Madras Legislative Assembly, prayed to the court for the issue of a writ by way of mandamus or other appropriate writ to declare and enforce his right to attend the sittings of Madras Legislative Assembly. (A. I. R. 1952 Madras 117)

Practice and proceedure of Parliament by M. N. Kaul, S. L. Shakdher pages. 211

என அத் தீர்ப்பில் கூறப்பட்டிருப்பது காண்க.

ஆக சிறையில் எந்தச் சட்டத்தின் கீழ் அடைக்கப் பட்டிருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சட்ட மன்ற கூட்டத்திற்கான அழைப்பாணை அனுப்பப் பெற வேண்டியது இன்றியமையாதது. அது அவ்வுறுப்பினரின் உரிமை. அது அனுப்பாமல் நடைபெறும் சட்டமன்றக் கூட்டம் சட்டப்படி செல்லும்படியாகாத திட்டமே ஆகும்;

# 3. குடிமகனின் அடிப்படை உரிமையா? சட்டமன்ற உரிமையா? முதலிடம் எதற்கு? சுப்ரீம் கோர்ட் தந்த தீர்ப்பு.

ஓர் உறுப்பினர்க்கு அழைப்பு ஆணை அனுப்பாமல் சட்டசபைக் கூட்டம் தொடங்கப்படுதல் கூடாது. அவ்வாறு நடைபெறும் சட்டசபைக் கூட்டம் செல்லாது. அக்கூட்டத்தில் நடைபெற்ற செயல் எதுவும் செல்லாது என்பதைப் பாராளுமன்ற சட்டமன்ற நடைமுறைகள் குறித்து வழங்கப்பட்ட பல்வேறு தீர்ப்புச் சான்றுகள் உறுதி செய்கின்றன என்பது உண்மை.

ஆனால், அக்காரணம் காட்டி, 10 உறுப்பினர்களின் பதவி இழப்புத் தீர்மானம் நிறைவேற்றிய சட்டசபைக் கூட்டம் செல்லாது என நீதிமன்றம் செல்ல முடியுமா? அரசியல் சட்டம் 105(2); 194(2) பிரிவுகள், நாடாளுமன்ற சட்டமன்ற செயல்பாடு குறித்து, யாரும், எந்த வழக்கு மன்றத்திலும் முறையீடு செய்யக் கூடாது என்றும், அரசியல் சட்டம் 122வது மற்றும் 212வது பிரிவுகள் பாராளுமன்றத்து எந்தச் செயல்பாடு குறித்து வழக்கு எதையும் எந்த நீதிமன்றமும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் தெளிவாகக் கூறியிருக்கும் போது இது

குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கலாமா என்ற கேள்விகள் முறையானவையே.

ஆனால், பாராளுமன்ற, சட்ட மன்ற நடவடிக்கை குறித்து விசாரிக்கும் உரிமை நீதிமன்றத்திற்கு இல்லை எனக்கூறும் நம் அரசியல் சட்டத்திலேயே, பாராளுமன்ற, சட்ட மன்ற முறைகேடுகள் சில குறித்து நீதி மன்றம் விசாரிக்கலாம் என்பதற்கும், அவ்வகையில் விசாரிக்கப் பட்டுள்ளன என்பதற்கும், ஏராளமான முன் மாதிரிகளும் உள்ளன. அவற்றை விளக்குவதே இக்கட்டுரை.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பேச்சுரிமை அரசியல் சட்டம் 105 (1) பிரிவிலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பேச்சுரிமை அரசியல் சட்டம் 194 (1) பிரிவிலும் வழங்கப்பட்டிருப்பது போலவே இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனுக்குமான பேச்சுரிமை, அரசியல் சட்டம் 19 (எ) பிரிவில் வழங்கப்பட்டுள்ளது.

நாடாளு மன்றத்தில் பேசப்பட்ட பேச்சு, நிகழ்ந்த செயல்பாடு குறித்து எந்த நீதிமன்றமும் விதிக்கக்கூடாது என அரசியல் சட்டம் 105 (2) பிரிவும், அதே போல் சட்ட மன்றத்தில் பேசப்பட்ட பேச்சு, நிகழ்ந்த செயல்பாடு குறித்து எந்த நீதிமன்றமும் விவாதிக்கக்கூடாது என அரசியல் சட்டம் 194 (2) பிரிவும் தடை விதித்து இருக்கின்றன.

ஆனால் அரசியல் சட்டம் 19 (எ) பிரிவின் கீழ் இந்தியக் குடிமகன் ஒருவனுக்கு வழங்கப்பட்ட உரிமையை நிலைநாட்டிக் கொள்ள உச்ச நீதி மன்றம் செல்ல, குடி மகனுக்கு அரசியல் சட்டம் 32 பிரிவு உரிமை வழங்கி யுள்ளது.

Right to constitutional Remedies; 32. Remedies for enforcement of rights conferred by this part (1) The right the move the supreme court by appropriate pro-

ceedings for the enforcement of the rights conferred by this part is guaranteed.

எம். எஸ். எம். சர்மா என்பவருக்கும், கிருஷ்ண சின்ஷா என்பவருக்கும் இடையிலான வழக்கு ஒன்றில் உச்சநீதி மன்றம், "அரசியல் சட்டம் 105(3) மற்றும் 194 (3) பிரிவுகள் முறையே பாராளு மன்ற, சட்ட மன்றங்களால் இயற்றப்பட்ட சாதாரணச் சட்டங்கள் அல்ல; அவை அரசியல் நிர்ணய சபை சட்டங்களாகும் என்றும், அவை, அடிப்படை உரிமைகள் சம்பந்தப்பட்ட அரசியல் சட்டப் பிரிவுகளைப் போலவே முழுமை பெற்றனவாம்" என்ற தீர்ப்பை வழங்கியுள்ளது.

The supreme court also held, that the provisions of articles 105 (3) and 194 (3) are constitutional laws and not ordinary laws made by parliament or State Legislature and that, therefore, they are as supreme as the provisions of articles relating to fundamental rights. A. I. R. 1959 S. C. 395

இதை, கவுல் அவர்களும், ஷக்தர் அவர்களும் "பாராளுமன்ற பழக்க வழக்கங்களும், நடைமுறைகளும்" (Practice and procedure of parliament) என்ற தம்முடைய நூலின் 232 ஆம் பக்கத்தில் எடுத்துக் காட்டியுள்ளனர்.

இந்த அரசியல் சட்டப் பின்னணியில் பாராளுமன்ற, சட்ட மன்ற உரிமைகளுக்கும், குடிமகனின் அடிப்படை உரிமைகளுக்கும் மோதல் வரும் போது என்ன நிலைமை என்பதைப் பார்க்க வேண்டும்.

அதற்கான விளக்கத்தையும் உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பு ஒன்றில் வழங்கியுள்ளது. 1954இல் கேசவ சிங் என்பவர், சட்டமன்ற உறுப்பினர் ஒருவரைப் பற்றிக் கூறிய கருத்து சட்ட மன்றத்தையே அவமதித்ததாகக் கொண்டு உத்திரப்பிரதேச சட்ட மன்றம் அவருக்கு ஏழு

நாள் சிறைத் தண்டனை விதித்து சிறையில் அடைத்து விட்டது. கேசவசிங், அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். நீதி மன்றம் வழக்கை ஏற்றுக் கொண்டு அவரை ஜாமீனில் விடுதலை செய்தது. இதற் கிடையில் அவர் ஆறு நாள் சிறை தண்டனை அனுப வித்தும் விட்டார். உத்திரப் பிரதேச சட்டசபை அலகாபாத் உயர்நீதிமன்ற செயல் உரிமை மீறியதாகும் எனக் கொண்டு, கேசவசிங், அவர் வழக்கறிஞர், வழக்கை ஏற்றுக்கொண்ட நீதிபதி ஆகியோரைக் கைது செய்து கொண்டு வருமாறு தீர்ப்பளித்தது; உயர்நீதி மன்றம், சட்ட மன்றத்தின் அச்செயற்பாட்டிற்குத் தடை விதித்து விட்டது. சட்ட மன்றற்திற்கும், நீதி மன்றத்திற்கும் மோதல் வரவே, குடியரசுத் தலைவர், அரசியல் சட்டம் 143 பிரிவின் கீழ், இதில் உச்சநீதிமன்றத்தின் கருத்தறிய, உச்ச நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தார்.

உச்சநீதி மன்றம், அரசியல் சட்டம் ஒரு குடிமக னுக்கு வழங்கியிருக்கும் அடிப்படை உரிமைக்கு ஊறு நேரும் போது, அவனுக்கு நீதி மன்றம் செல்ல அரசியல் சட்டம் அனுமதி அளித்துள்ளது. அடிப்படை உரிமைக்கும், சட்ட மன்ற உரிமைக்கும் மோதல் வரும்போது, அடிப்படை உரிமையே முதல் இடம் பெறும். ஆகவே கேசவசிங் வழக்கை ஏற்றுக் கொண்ட அலகாபாத் நீதிமன்றச் செயல் முறையானதே எனத் தீர்ப்பு வழங்கி விட்டது.

உச்ச நீதி மன்றத்து இத்தீர்ப்பை, திருவாளர் கவுல் அவர்களும் திருவாளர் ஷக்தர் அவர்களும், தம்முடைய நூலின் 232 வது பக்கத்தில் எடுத்துக் காட்டியுள்ளனர். அது வருமாறு:

"The supreme court in its majority opinion held, that the powers and privileges conferred on State legisla-

ures by Articles 194 (3) were subject to the fundamental rights, and that the Legislature did not have the privilege or power to the effect that their general warrants should be held to be conclusive" (A. I. R. 1965 S. C. 745)

—Kaul and Shakdhar (page : 232)

இதே தீர்ப்பை, இந்திய நாடாளுமன்ற, சட்டமன்றப் பேரவைத் தலைவர்களின் 50 வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி வெளியிட்ட மலரிலும் முன்னாள் மக்களவை துணைத்தலைவர், திரு. ஜி.ஜி. ஸ்வெல் அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்; அது வருமாறு:

"The supreme court opined that the fundamental rights in the constitution empowered a citizen to move the court for their enforcement, and when the fundamental rights came in to conflict with the privileges of the Legislature the fundamental rights should prevail. It therefore upheld the action of the High Court of Allahabad in hearing the petition."

—50th Anniversary of conference of presiding officers of Legislative Bodies in India. souvenir P. 10.

உச்ச நீதி மன்ற கருத்து இதுவாகவே, அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டுமென்று உத்தரப் பிரதேசச் சட்ட மன்றம் கருதியது. இதற்கிடையில் கேசவசிங் வழக்கை ஏற்று விசாரித்த அலகாபாத் உயர் நீதிமன்றம், சட்ட மன்றத் தீர்ப்பு, அரசியல் சட்டத்திற்கு முரணானது அன்று. ஆகவே கொடுத்த தண்டனை முறையானதே எனத் தீர்ப்பளித்து விட்டது. இந்நிகழ்ச்சியால் உத்தரப்பிரதேச சட்டமன்றம் கேசவசிங்கிற்கு வழங்கிய தண்டனை நிறைவேற்றப்பட்டதுஎன்றாலும்—

"இந்தியக் குடிமகனின் அடிப்படை உரிமைக்கும் சட்ட மன்ற உரிமைக்கும் மோதல் வரும்போது, அடிப் படை உரிமைக்கே முதலிடம் உண்டு, அவ்வகையில் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டவர், சட்ட மன்றத்தை எதிர்த்து வழக்கு தொடுக்கலாம், உயர் நீதிமன்றம் அவ் வழக்கை ஏற்றுக் கொள்ளலாம்," என உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மாற்றப்படாமல் அப்படியே நிற்கிறது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

இந்நிலையில், 1965 சனவரி 11, 12 தேதிகளில் பம் பாயில் கூடிய நாடாளு மன்ற சட்ட மன்ற சபாநாயகர் களின் மாநாடு, உத்திரப்பிரதேச சட்ட மன்றத்திற்கும் அலகாபாத் உயர்நீதிமன்றத்திற்கும் இடையில் ஏற்பட்ட மோதல் குறித்து, உச்சநீதி மன்றம் தெரிவித்த கருத் தினை விரிவாக ஆராய்ந்து, அரசியல் சட்டம் 105, மற்றும் 194 பாராளு மன்றத்திற்கும் மாநில சட்ட மன்றங்களுக் கும் வழங்கியுள்ள உரிமைகள் எந்த வகையிலும் பாதிக் காத வகையில் அவ்விரு சட்டங்களும் திருத்தப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது.

"The opinion of the supreme court was discussed by the conference of presiding officers of Legislative Bodies in India, held at Bombay on January 11 and 12, 1965. The confercnce unanimously adopted a resolution, expressing its view, that suitable amendments to Articles 105 and 194 should be made in order to make the intention of the constitution makers clear beyond doubt, so that the powers, privileges and immunities of Legislatures their members and committees could not in any case be construed as being subject or subordinate to other articles of the constitution."

அவ்வாறே கீழ்வரும் தீர்மானத்தையும் நிறைவேற்றினர்.

"உச்ச நீதி மன்றம் வழங்கிய கருத்து, பாராளுமன்ற சட்ட மன்றங்களைத் தரத்தில் குறைந்த நீதி மன்ற நிலைக்குத் தள்ளிவிட்டதன் பயனாக, பாராளுமன்றம் மற்றும் சட்ட மன்றங்கள், தங்கள் பணிகளைத் திறமையாகவும், நியாயமாகவும், கண்ணியமாகவும் நிறைவேற்றத் தடையாகிவிடும். ஆதலின்—

பாராளு மன்ற சட்ட மன்றங்களுக்கும் அவற்றின் உறுப்பினர்களுக்கும், அவற்றின் பல்வேறு குழுக்களுக்கும் உள்ள அதிகாரம் உரிமை, சட்டம் பாதுகாப்பு ஆகியன அரசியல் சட்டத்தின் எந்தப் பிரிவுக்கும் கீழ்ப்பட்டதாகவோ அவற்றால் நடவடிக்கை எடுக்கக்கூடியதாகவோ இருத்தல் கூடாது என்று, அரசியல் சட்டத்தை உருவாக்கியவரின் நோக்கம் ஐயத்திற்கு அப்பாற்பட்டது என்பதை நிலைநாட்டும் வகையில் அரசியல் சட்டம் 105 மற்றும் 194க்கும் பொருத்தமான திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

"Whereas the opinion of the supreme court has reduced legislatures to the status of inferior courts and has implications that would deter the legislatures from discharging their functions efficiently, honestly and with dignity.

Now therefore this conference consideres that suitable amendments to articles 105 and 194 should be made in order to make the intention of the constitution makers clear beyond doubt. So that the powers, privileges and immunities of legislatures their mambers and Committees

could not, in any case, be construed as being subject to or subordinate to any other articles of the constitutions.'

Practice and proceedure of parliament by kaul and Shakdhar (page-233)

இந்தியப் பாராளு மன்ற சட்ட மன்றப் பேரவைத் தலைவர்கள் மாநாடும். உச்சநீதி மன்றத் தீர்ப்பின் விளைவாக, பாராளுமன்ற, சட்டமன்ற உரிமைகள் பறிக்கப்படுவதைத் தடுக்க, அரசியல் சட்டத்திற்குப் பொருத்தமான திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்றுதான் கருத்து தெரிவித்ததே ஒழிய, அடிப்படை உரிமைக்கும், பாராளுமன்ற சட்டமன்ற உரிமைக்கும் மோதல் வரும் போது, அடிப்படை உரிமைக்கே முதல் இடம் என்றும், பாராளுமன்ற சட்டமன்ற உரிமைகள், அடிப்படை உரிமைக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்றும், அது நடவாத போது, அடிப்படை உரிமை பாதிக்கப் பெற்றவர். பாராளுமன்றம், சட்ட மன்றங்களை எதிர்த்து நீதி மன்றம் செல்லும் உரிமை படைத்தவராவார் என்றும் கூறிய உச்ச நீதி மன்றத் தீர்ப்பு தவறானது என்று தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

உச்ச நீதிமன்ற இத் தீர்ப்பு குறித்துப் "பாராளு மன்றங்களும் நடைமுறைகளும்' என்ற தம்முடைய நூலில் தனியே விரிவாக விவாதித்த திரு. கவுல் அவர்களும், இதில் எழுப்பிய பிரச்சினை அவ்வாறே இருக்கிறது. பொருந்தும் வகையில் தீர்க்கப்படவில்லை; பாராளு மன்றத்தின் ஒரு செயல்பாட்டு மூலம், தெளிவாகச் சொல்வதானால், சம்பந்தப்பட்ட சட்டங்களைப் பொருந்தும் வகையில் திருத்தி, பாராளுமன்ற சட்ட மன்றங்களை அவமதிப்போரை ஜாமீனில் விடும் அதிகாரம் நீதி மன்றங்களுக்கு இல்லை என்பதை ஐயத்திற்கு இடம் இல்லாத வகையில் செய்வது ஒன்றே.

நேர்ந்துவிட்ட தவறினைத் திருத்த இயலும்" என்று தான் கூறியுள்ளார்.

"Now that point still remains, and has not been adequately settled and that can only be corrected, by a parliamentary statute, that is to say by oppropriately amending the relevent section and putting it beyond doubt, that the courts have no power to grant bail in contempt cases."

Parliamentary Institutions and proceedure by M. N. Kaul page 217.

திரு. கவுல் அவர்களும், உச்ச நீதி மன்றத் தீர்ப்பின் விளைவைத் தவிர்க்க, அரசியல் சட்டத்தின் சில பிரிவுகளுக்குத் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்று தான் கூறியுள்ளாரே ஒழிய, அடிப்படை பாதிக்கும் போது பாதிக்கப்பட்டவர் பாராளுமன்ற சட்ட மன்றங்களை எதிர்த்து நீதி மன்றம் செல்லலாம் என்ற உச்ச நீதி மன்றத் தீர்ப்பு தவறானது எனச் சொல்லவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியப் பாராளுமன்றச் சபாநாயகர் பல்வேறு மாநிலங்களின் பேரவை மேலவைத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்துச் சபாநாயகர்களும் கூடி, தீர ஆராய்ந்து பாராளுமன்ற, சட்ட மன்ற உரிமைகள் பறிக்கப்படாத வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என 1965லேயே முடிவு செய்தனர் என்றாலும், அரசியல் சட்டம் அவ்வகையில் திருத்தப்படவில்லை.

பாராளுமன்ற, சட்டமன்ற நிகழ்ச்சிகளில் நீதி மன்றங்கள் தலையிடக் கூடாது என்ற உணர்வு பேரவைத் தலைவர்களிடையே இவ்வளவு ஆழமாகப் பதிந்திருக்கும் நிலையிலும், 1969-இல் மற்றொரு நிகழ்ச்சி நிகழ்ந்து விட்டது.

## 4. அழைப்பு அனுப்பாததை எதிர்த்து ஒரு சட்ட மன்ற உறுப்பினர் உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போட உரிமை உண்டா?

பஞ்சாப் மாநிலத்துச் சட்டப்பேரவை 1968-69 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினை விவாதித்து அனுமதிப்பதற்கு முன்பாகவே சபாநாயகர், சட்டப் பேரவையை இரண்டு மாதங்களுக்கு ஒத்தி வைத்து விட்டார். சட்டமன்றம் செயலற்றதாகி விட்டது. வேறு வழியின்றி, சபாநாயகர் செயலை எதிர்த்து, அரசு மூலமாக சட்ட மன்றமே உச்ச நீதி மன்றத்திற்குச் சென்றது. உச்ச நீதி மன்றம்—

"பேரவையை மார்ச்சு 31க்குப்பிறகு ஒத்திவைத்ததன் மூலம் அரசின் நிதித் துறை செயலற்றதாகி விட்டது. மக்களாட்சி முறையும் சிதறுண்டு போய் விட்டது. ஆகவே சட்டப் பேரவை செயல் படா வகையில் பேரவை ஒத்தி வைக்கப்படல் கூடாது" என்ற தீர்ப்பை வழங்கி விட்டது.

In the Punjab legislative Assembly, the speaker's decision to adjourn the House for two months, created a serious crisis in the Punjab Assembly as the Assembly had yet to pass the budget for the year 1968—69. In

this context, the supreme court observed "The legislature cannot be allowed to hibernate, due to adjournment by the speaker for a period beyond 31st March, while the financial business languished and the constitutional machinery and democracy itself are wrecked."

—A. I. R. 1969 S. C. 903 Kaul and Shakdhar: Practice and procedure of parliament page : 104

சட்டமன்ற நிகழ்ச்சிகளில், நீதிமன்றங்கள் தலையிடக் கூடாது என்பதில் தீவிரம் காட்டும் சட்டமன்றமே தன் குறை தீர, அரசு மூலம் உச்சநீதி மன்றத்திற்குச் செல்ல நேர்ந்தது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற, சட்ட மன்ற நிகழ்ச்சிகளில், உயர்நீதி மன்றங்களும் உச்சநீதிமன்றமும் தலையிட்டுத் தீர்ப்பு வழங்கியதற்கான சான்றுகள் மேலும் உள்ளன.

1969-இல் பூரி கோவர்த்தனபீடம் சங்கராச்சாரியாரின் ஒரு கருத்து, செயல் குறித்து நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது அவையில் கூறப்பட்ட சொற்களால் புண்பட்ட, மடத்தைச் சேர்ந்த தேஜ்கிரான் ஜெயின் என்பவர் மக்களவை சபாநாயகர் மீது டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். நீதி மன்றம் வழக்கை ஏற்றுக் கொண்டு, சபாநாயகர், உள்துறை அமைச்சர், அவை உறுப்பினர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியது. நோட்டீஸ் மறுக்கப்பட்டாலும், வழக்கின் முடிவை எதிர்நோக்கி—

நாடாளு மன்றம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கிடையே டெல்லி உயர் நீதிமன்றம்

வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது. என்றாலும் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுக்க அனுமதித்தது. ஜெயின், உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். வழக்கை ஏற்றுக் கொண்ட உச்சநீதி மன்றமும் பாராளுமன்ற சபாநாயகர் உள்ளிட்ட மூவருக்கும் நோட்டீஸ் அனுப்பியது. பாராளுமன்ற சபாநாயகர் நோட்டீஸை மறுத்து விட்டார், இதற்கிடையில் உச்சநீதி மன்றமும் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது.

பாராளுமன்றம் ஜெயின் செயல் உரிமை மீறிய தாகும் எனக்கருதி, உரிமைக் குழுவுக்கு அனுப்ப, உரிமைக் குழு, இதுதான் முதன் முறை என்பதாலும், நீதிமன்றங் கள் வழக்கை ஏற்றுக் கொண்டிருந்தாலும், இறுதியில் பாராளுமன்ற நிகழ்ச்சியில் தலையிட உரிமை இல்லை என தெரிவித்து விட்டமையாலும், இத்துடன் விட்டு விடலாம், மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் தேவை இல்லை எனக்கூறி முடித்து விட்டது.

இது பேரவைத் தலைவர்கள் மாநாட்டு மலரில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

presiding officers conference souvenir, page.. 10, 11

பாராளுமன்றம், தன்னை, உயர்நீதி மன்றத்திற்கு கொண்டு சென்ற தேஜ்கிரான் ஜெயின் மீதுதான் உரிமைப் பிரச்சனை எழுப்பி உரிமைக்குழுவிற்கு அனுப்பி வைத்ததே அல்லாது, சபாநாயகரையும் உறுப்பினர்களை யும், வழக்கு மன்றத்திற்கு வரப்பணித்து நோட்டீஸ் அனுப்பிய டெல்லி உயர்நீதி மன்றத்தின் மீதோ, உச்சநீதி மன்றத்தின் மீதோ எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை என்பதும் கண்டுக் குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றமோ, சட்ட மன்றமோ, தமக்கு வரையறுத்துக் கொடுத்துள்ள உரிமைகளை மீறிச் செயல்படும்போது, அவற்றின் அச்செயல் குறித்து நீதி மன்றங்களுக்குச் செல்லலாம் என்பது இதனால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் 1971ல் கோலக்நாத் என்பவர், பஞ்சாப் மாநில அரசு மீது தொடுத்த வழக்கில் உச்ச நீதிமன்றம் 11 நடுவர்களைக் கொண்ட ஒரு பெஞ்சாக அமர்ந்து ஆராய்ந்து ஆறு நடுவர்கள், "அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை (Fundamental rights) அறவே நீக்கவோ உரிமைகளைக் குறைக்கவோ (Take away or abridge) மக்கள் அவைக்கு அதிகாரம் இல்லை" என்ற தெளிவான தீர்ப்பினை வழங்கி விட்டது.

"In February, 1971, The Supreme Court held by a majority of one in a special bench of 11 judges, that the parliament had no power by the procedures of amendment to take away or abridge the fundamental rights."

Page: 11 Presiding officers conference Souvenir

உச்ச நீதி மன்றம், இத் தீர்ப்பு வழங்கியதற்குக் காட்டிய பல்வேறு காரணங்களில் தலையாயவை இரண்டு. ஒன்று அரசியல் சட்டம் 3-ஆம் பகுதியில் தனக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை நிலை நாட்டிக்கொள்ள உச்ச நீதிமன்றம் செல்லும் உரிமையை வழங்கும் அரசியல் சட்டம் 32-வது பிரிவு தெளிவாக உள்ளது என்பது.

"Article 32 of the constitution was explicit. The state could not make laws to take away or abridge the rights conferred by part III of the constitution."

Ditto: Page 12

இரண்டாவது காரணம், அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமாயின், பாராளுமன்றம், ஒரு கூட்டம் மூலம், மற்றொரு அரசியல் நிர்ணய உரிமையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது.

"If the constitution were to be amended, parliament should by legislation call for another constituent Assembly."

Ditto: Page: 12

உச்ச நீதிமன்ற இம்முடிவுக்கு மாறான கருத்தைத் தெரிவித்த பாராளுமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் "மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்களாக 768 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில், மக்களவை உறுப்பினர்களாகிய 525 பேர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள். ஆகவே அவர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களாகிய 296 பேரைக் காட்டிலும் பெரிதும் பிரதிநிதித்துவம் வாய்ந்தவர்கள் ஆவர்" என்று மட்டுமே கூற முடிந்தது.

"The present parliament with 768 members of which 525 in the Lok sabha were directly elected by the people was far more representative of the people of India than the constituent Assembly with its 296 members who were indirectly elected."

Ditto: Page: 12

ஆனால் அடிப்படை உரிமைகளில் கைவைக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு இல்லை. கைவைத்தால், பாதிக்கப்பட்டவர், பாராளுமன்றத்தை எதிர்த்து, உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கலாம் என்ற உச்ச நீதி மன்றத் தீர்ப்பு குறித்து மறுத்து ஒரு சொல்லும் சொல்லவில்லை.

அடிப்படை உரிமைக்கும், பாராளுமன்ற உரிமைக்கும் மோதல் வரும்போது, அடிப்படை உரிமைக்கே முதல் இடம். அடிப்படை உரிமை பாதிக்கப்படும்போது, பாதிக்கப்பட்டது, பாராளுமன்ற சட்டமன்ற உரிமைகளால் என்றாலும், அம்மன்றங்களையும் எதிர்த்து, அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டவர் நீதி மன்றங்கள் செல்லலாம் என்ற உரிமை 1971-வரை மறுக்கப்படவில்லை.

1971-ல் பொதுத் தேர்தல் வந்தது. அரசியல் சட்டத்தையும் திருத்துவதற்கு தேவைப்படும் பெரும்பான்மையோடு காங்கிரஸ் வெற்றி பெற்றது. அதன் பயனாய் தன் அரசியல் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள பல்வேறு திருத்தங்களை அரசியல் சட்டத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிற்று; அவ்வாறு திருத்தப்பட்ட திருத்தங்களில் ஒன்றான 24-வது திருத்தம், அடிப்படை உரிமை உட்பட அரசியல் சட்டத்தின் எந்தப் பகுதியையும் திருத்தும் உரிமையைப் பாராளுமன்றத்திற்கு அளித்தது.

(Presiding Officers conference souvenir, page. 11)

தன் உரிமையை நிலை நிறுத்திக்கொள்ள பாதிக்கப்பட்டவர் உச்ச நீதி மன்றம் செல்லலாம் என்ற உரிமை. வழங்கும் அரசியல் சட்டம் 32-வது பிரிவு உட்பட உள்ள அடிப்படை உரிமை பற்றிய பிரிவுகளையும் திருத்தும் உரிமையைப் பாராளுமன்றம் 24-வது திருத்தம் மூலம்

பெற்றுக் கொண்டிருக்கும்போது ஓர் உறுப்பினர்க்கு, சட்டப் பேரவைக் கூட்டத்திற்கான அழைப்பினை அனுப்பாமலே சட்டப் பேரவை கூட்டப்படுமாயின், அவ்வாறு கூட்டப்பட்ட சட்டப் பேரவைக் கூட்டம் செல்லாது என நீதிமன்றம் செல்லமுடியுமா? செல்வதற்கு அரசியல் சட்டத்தில் வகையிருக்கிறதா என்பதற்கான விளக்கம் அடுத்த கட்டுரையில் தரப்படும்.

பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அவை நடவடிக்கையில் கூறிய சொற்கள் செயல்பாடுகள் குறித்து எந்த நீதி மன்றத்திற்கும் பதில் சொல்லத் தேவை இல்லை, என, முறையே 105-மற்றும் 194 அரசியல் சட்ட பிரிவுகள் பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவற்றின் அதிகாரிகளுக்கும் பாது காப்பும் பாரளுமன்ற சட்ட மன்ற நடைமுறைகளில் நிகழும் முறைகேடுகள் குறித்து விசாரிக்க எந்த நீதிமன் றத்திற்கும் அதிகாரம் இல்லை என 122 மற்றும் 212 அரசியல் சட்டப்பிரிவுகள் நீதி மன்றங்களுக்குத்தடையும் விதித்திருக்கும் நிலையில் ஒரு சட்டமன்ற உறுப்பினர்க் குச் சட்டமன்றக் கூட்ட அழைப்பாணை அனுப்பாமல் கூட்டப்படும் சட்டமன்றக் கூட்டம் செல்லாது என்ற காரணத்தை முன்வைத்து, நீதிமன்றம் செல்லும் உரிமை அந்த உறுப்பினர்க்கு உண்டா? அவர் வழக்கை ஏற்று விசாரிக்கும் உரிமை நீதி மன்றத்திற்கு உண்டா என்ற கேள்வி, நியாயமான கேள்வியே.

இந்தக் கேள்விக்கு விடை காண, நாடாளுமன்ற சட்ட மன்றங்களுக்கு அந்த உரிமையையும், நீதிமன்றங் களுக்கு அந்தத் தடையையும் விதிக்கும்சட்டப்பிரிவுகளில் ஆளப்பட்டிருக்கும் சில சொற்றொடர்கள், அச்சொற் றொடர்களுக்கான பொருள் விளக்கங்களைக் காண்பதும் ஓர் உறுப்பினர்க்குக் கூட்டத்திற்கான அழைப்பாணை

அனுப்பாதது, அச்சொற்றொடர்கள் உணர்த்தும் பொருள் வளையத்துக்குள் வருமா என்பதை ஆராய் வதும் இன்றியமையாதனவாம்.

பாராளு மன்றத்திற்கும், அதன் உறுப்பினர்களுக்கும் அதன் அதிகாரிகளுக்குமான அதிகாரம். உரிமை. சட்டப் பாதுகாப்பை வலியுறுத்தும் அரசியல் சட்டத்தின் 105 மற்றும் 105 (2) பிரிவுகளும் சட்ட மன்றத்திற்கும் அதன் அதிகாரிகளுக்குமான அதிகாரம், உரிமை. சட்டப் பாதுகாப்பை வலியுறுத்தம் அரசியல் சட்டத்தின் 194 மற்றும் 194 (2) பிரிவுகளும் முறையே பாராளுமன்ற நடவடிக்கை முறைகளை, சட்டமன்ற நடவடிக்கை முறைகளையொட்டி உறுப்பினர்களுக்குப் பேச்சுரிமை வழங்கப் படுகிறது என்றும், பாராளுமன்றத்திலோ, சட்டமன்றத் திலோ பாராளுமன்ற சட்டமன்றத் குழுக்களிலோ, பேசிய பேச்சு, அளித்த வாக்குரிமை போலும் பாராளு மன்ற சட்டமன்ற நடைமுறைகள் குறித்து எந்த நீதி மன்ற நடவடிக்கைகளுக்கும் அவர்கள் கட்டுப்பட்டவர் அல்லர் என்றுதான் கூறியுள்ளன.

105. Power, Privilege etc of the House of parliament and of the members and committees there of :

1. Subject to the provisions of this constitution and to the rules and standing orders, regulating the procedure of parliament there shall be freedom of speech in parliament.

2. No member of parliament shall be liable to any proceedings in any court in respect of anything said, or any vote given by him in parliament, or any committee thereof.

194. power, Privileges etc of the Houses of legislature and of the members and committees thereof :

1. Subject to the provisions of this constitution and to the rules and standing orders regarding the proceduce of that legislature, there shall be freedom of speech in the legislature of every state.

2. No member of the legislature of a state shall be liable to any proceedings in any court in respect of anything said, or any vote given by him in the legislature or any committee thereof.

122. Courts not to inquire into proceedings of Parliament :

1. The validity of any proceedings in parliament shall not be called in question on the ground of any alleged irregulartity of procedure.

2. No officer or member of parliament in whom powers are vested by or under this constitution for regulating procedure or the conduct of business or for the maintaining order in parliament shall be subject to the jurisdiction of any court in respect of the exercise by him of these powers.

212. Courts not to inquire in to proceedings of the legislature :

1. The validity of any proceedings in the legislature of a state, shall not be called in question on the ground of any alleged irregularity of proceedure.

2. No officer or member of the legislature of a state, in whom powers are vested by or under this constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order in the legislature shall be subject to the jurisdiction of any court, in respect of the excercise by him of those powers.

ஆக, இப்பிரிவுகள் அனைத்திலும், முறையே-பாராளுமன்ற நடவடிக்கை முறை—

(Procedure of parliament)
(Proceedings of parliament)
(Proceedings in parliament)
சட்ட மன்ற நடவடிக்கை முறை
(Procedure ef the legislature)
(Proceeding of the legislature)
(Proceedings in the legislature)

என்ற தொடர்களே திரும்பத் திரும்ப ஆளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# 5. உரிமை பறிக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர உரிமையுண்டு!

பாராளுமன்றம் சட்டமன்றம் குறித்த அரசியல்சட்டப் பிரிவுகளில் காணும் இடம் எல்லாம், அவை நடவடிக்கை Proceeding of the House) என்ற தொடர் ஆளப்பட்டிருந்தாலும், அத்தொடருக்கான தெளிவான விளக்கத்தை, அரசியல் சட்டத்தில் எந்தப் பகுதியும் விளக்கவில்லை.

நம் அரசியல் சட்டத்தில் கூறப்படாத, விளக்கம் பெற முடியாதனவற்றிற்கெல்லாம், வழிகாட்டி நூல் இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றம் பின்பற்றும் நூலாம் என நம் அரசியல் சட்டத்தாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்ட பெருமைக்குரிய "எர்ஸ்கின்மே" என்பார் எழுதிய அந்த நூலும் "பாராளுமன்றத்து நடைமுறைகள்" (Proceedings in Parliament) என்ற தொடருக்கு இதுதான் தெளிவான பொருள் என்று திட்டவட்டமாகக் கூறவில்லை. அதுகூறும் விளக்கம் வருமாறு:

"பாராளுமன்றத்திற்கே உரிய சட்ட நுணுக்கச் சொல்லாம் "நடைமுறைகள்" (Proceeding) என்பதற்கான மூலப்பொருள் (குறைந்தது 17-வது நூற்றாண்டு

வரை அது கொண்டிருந்த பொருள்) முறையான சில செயல்பாடுகள், வழக்கமாகப் பாராளுமன்றம் தன்னுடைய ஒருங்கிணைந்த கூட்டுத் தன்மையில் எடுக்கும் முடிவு என்பதே ஆம். இப்பொருள் இயற்கையாகவே பாராளுமன்றம் எடுக்கும் செயல்பாடுகளுக்கு ஆதாரமான அவை அலுவல்களின் முறைகளையும், பாராளுமன்றத்து மொத்த நடைமுறையினையும், அவற்றுள்ளும் தலையாயதான, இறுதியில் எடுக்கும் முடிவினுக்கு வழிவகுக்கும் அவையின் வாதத்தையும் குறிக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது."

"The primary meaning, as a technical parliamentary term of "procedings" (which it had at least as early as the 17th Century) is, some formal action usually, a decision taken by the House in its collective capacity. This is naturally extended to the forms of business, in which the House takes action, and the whole process, the principal part of which is debate, by which it reaches a decision."

Eriskine May's Page: 87

பாராளுமன்ற நடைமுறைகளில் திளைத்து எழுந்து, முதிர்ந்த அறிவு பெற்றவர்களாகிய திருவாளர்கள் கவுல், ஷக்தர் ஆகிய இவர்களாலும், பாராளுமன்ற நடைமுறை (Proceeding in Parliament) என்ற தொடருக்குத் தெளிவான பொருளைக் கூற முடியவில்லை.

"பாராளுமன்ற பழக்கங்களும் நடைமுறைகளும்" என்ற தம் நூலில் ஒரு பத்தியின் தொடக்கத்தில் "பாராளுமன்றத்தின் நடைமுறைகள்" (Proceedings in Parliament) என்ற தொடருக்கோ, "பாராளுமன்றத்தில் சொல்லப்பட்ட எந்தப் பொருளும்" (Anything said

in Parliament) என்ற தொடருக்கோ சட்டங்களை ஆராய்ந்து முடிவு கூறும் நீதி மன்றங்களால் தெளிவான பொருள் உணர்த்தப்படவில்லை" என்று முதல் வாக்கியத்தை முடித்துவிட்டு, அடுத்து "எர்ஸ்கின்மே" அவர்கள் கூறியதாக மேலே எடுத்துக்காட்டிய பகுதியை, எழுத்துப் பிசகாமல் அப்படியே எடுத்துக் கூறி முடித்து விட்டு, அடுத்த பத்தியில் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

"பாராளு மன்றத்தின் நடைமுறைகள்" என்ற தொடர், கேள்வி கேட்பது, அக்கேள்வியை எழுத்து மூலம் அறிக்கையாகக் கொடுப்பது ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாம். அவையின் உறுப்பினர் என்ற முறையில், தன்னுடைய பாராளுமன்ற அலுவல்களை, இரு அவைகளிலும் ஆற்றும் வகையில் சொல்லிய அனைத்துச் சொல்லையும் ஆற்றிய செயல்களையும் போலவே, இரு அவைகளின் குழுக்களிலும், ஓர் உறுப்பினர் என்ற உரிமையில் தன் கடமையை நிறைவேற்றும் வகையில், கூறிய ஒவ்வொரு சொல்லையும், ஆற்றிய ஒவ்வொரு செயலையும் உள்ளடக்கியதாம்" என்று முடித்துள்ளார்.

அதோடு நில்லாமல், அடுத்து ஒரிஸா உயர்நீதி மன்றம் "பாராளுமன்றத்தில் நடைமுறைகள்" என்ற தொடர், பாராளுமன்றம் உண்மையில் கூடி இருக்கும் காலத்து அவை நடவடிக்கைகளை மட்டும் குறிப்பிடும் நிலையில் வரையறுத்து வைக்கப்பட்டுவிடவில்லை. கேள்விகளுக்கான அறிக்கைகளைக் கொடுப்பது, தீர்மானங்களுக்கான அறிக்கைகளைக் கொடுப்பது போலும், சில பூர்வாங்க நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாம் வகையில் முடிந்த முடிவாக ஆளவல்ல பாராளுமன்றச் சொல்லாட்சியாகி விட்டது எனத்

தோன்றுகிறது. கூறிய அத்தொடரின் அச்சொல்லாட்சி நிலையிலிருந்து, உய்த்துணரக்கிடக்கும் இப்பொருளாட்சி, ஒரு கேள்விக்கான அறிவிக்கை கொடுக்கப்பட்டுப் பேரவைத் தலைவர் அதை ஏற்பதோ மறுப்பதோ செய்யும்போது, அக்கேள்வி, உண்மையில், நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே கேட்கப்பட்ட நிலைக்கு ஏற்ப ஏற்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்ற கருத்தோட்டத்தில் பெறப்பட்டதாகும்" எனத் தெரிவித்த கருத்தையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

**Proceedings in parliament:**

The term "proceedings in parliament" or the words "any thing said in parliament" have not so far been expressly defined by courts of law. However as technical term, these words have been widly interpreted to mean any formal action, usually a decision to be taken by the House in its collective capacity, including the forms of business, in which the House takes action, and in the whole process, the principal part of which is debate by which it reaches a decision. The term thus can notes more than mere speeches and debates.

The term "proceedings in parliament" covers both the asking of a question and the giving of written notice of such question and includes every thing said or done by a member in the excercise of his functions as a member in a committe of either House, as well as everything said or done in either House in the transaction of parliamentary business.

In this connection the Orissa High Court inter abia observed :

"It seems thus a settled parliamentary usage that, "Proceedings in parliament" are not limitted to the proceedings during the actual session of the parliament, but also include some preliminary steps such as giving notice of questions or notice of resolutions etc presumably this extended cannotations of the said terms is based on the idea, that when notice or a question is given and the speaker allowes or disallowes the same notinaly it should be deemed that the questions were actually asked in the session of the parliament and allowed or disallowed as the case may be."

—A. I. R. 1953 Orissa 111.
—Practice and procecdurc of parliament by M. N. Kaul and S. L. Shakdher, pages, 204—205.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகள், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவ்விரண்டில், ஆங்கில வெளியீட்டில் எங்கெல்லாம் "Proceedings of the Assembly" என்ற தொடர் இடம்பெற்றுள்ளதோ, தமிழ், வெளியீட்டில் அங்கெல்லாம், அத்தொடரின் தமிழ் வடிவமாக "பேரவை நடவடிக்கைகள்" என்ற தொடரே இடம் பெற்றுள்ளது. 30(5); 46(5); 47(ஆ) ஆகிய விதிகளை ஒப்பிட்டுக் காண்க.

ஆக, "Proceedings of the House" என்ற தொடர், பேரவைத்-தலைவர் அவைக்கு வருதல் முதல் அவை ஒத்திவைக்கும் வரையான காலத்தில், அவையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், அவை நியமிக்கும் ஆய்வுக்குழு, பொதுக்கணக்குக்குழு, மதிப்பீட்டுக்குழு போலும் பல்

வேறு குழுக்கள் கூடியிருக்கும் போது நிகழும் நிகழ்ச்சி களையும் மட்டுமே குறிக்கும் என்பது ஐயத்திற்கு இடம் இன்றி உறுதியாகிறது.

அவை அலுவல்களாகக் கொள்ளப்படுவன யாவை?

(1) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் (4) (1) பதிவேட்டின் கையெழுத்து இடம் (5)

(2) பேரவைத்தலைவர் (7) துணைத்தலைவர் (8) தேர்தல்கள் மாற்றுத் தலைவர் பட்டியல் தருதல் (9)

(3) ஆளுநர் உரையும் அதன்மீது விவாதமும் (11, 12)

(4) தனியார் அலுவல்கள்

1. வினாவிடை (32) 2) கவன ஈர்ப்புத் தீர்மானம் (55) 3) ஒத்திவைப்புத் தீர்மானம்,(56), 4) அரைமணிநேர விவாதம் (54), 5) குறுகியகால விவாதம் (76) 6) பொது நலன் குறித்த நாள் குறிப்பிடாத தீர்மானம் (78) 7) பேரவைத் தலைவர், துணைத் தலைவர் பதவி விலக்கல் தீர்மானம் (68) 8)அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் (72) 8) தனித்தீர்மானம் (198) 10) வெட்டுத் தீர்மானம் (211) 11) தன்னிலை விளக்கம்.

(5) அரசு அலுவல்கள்:

1) நிதிநிலை அறிக்கை அளித்தலும் (207) அதன் மீது பொது விவாதமும் (209)

2) மானியக் கோரிக்கையும் விவாதமும் (211)

3) கூடுதல் நிதிக்கான மானியம் கோரல் (213).

4) துணை மானியக் கோரிக்கை (215)

5) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு விவாதம் (214)

6) பல்வேறு சட்டமுன் வடிவுகளின் விவாதம்.

பொதுவான அலுவல்கள்:

1) ஒழுங்கு பிரச்சினை எழுப்பல் (117)

2) உரிமைப்பிரச்சினை எழுப்பல் (245)

3) விளக்கம் கேட்டல் (89)

4) அறிக்கை அளித்தல் (90)

7) பேரவைத் தலைவர் அலுவல்கள்:

1) வினாக்கள், தீர்மானங்கள், சட்ட முன் வடிவுகளை அனுமதிப்பதும், மறுப்பதும்.

2) நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்குதல்

3) உறுப்பினரை வெளியேற்றுதல்

4) உறுப்பினரின் பெயரிட்டுக் குறிப்பிடுதல்.

5) குழுக்கள் சிலவற்றை நியமித்தல்.

6) வாக்கெடுப்பு

7) அவையை நாள் குறிப்பிட்டு ஒத்திவைத்தல்

அவை அலுவல்கள் என அரசியல் சட்டத்திலும், பேரவை விதிகளிலும் கூறப்பட்டிருப்பன இவைதாம். சட்டப் பேரவை விதி 3-ன்படி, சட்டசபைக் கூட்டத்திற்கான அழைப்பாணையினை உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டிய செயலாளர் செயல், அவைஅலுவல்கள் பட்டியலில் அடங்காது. அழைப்பாணை அனுப்பப்பட

வேண்டும் எனக் கேட்பது, உறுப்பினரின் பாராளுமன்ற உரிமை?

அரசியல் சட்டம் மூன்றாம் பகுதியில் வழங்கப்பட்டிருக்கும் 'அடிப்படை உரிமை என்பதன் கீழ், இது அடங்காது. இந்தியக்குடிமகன் என்ற உரிமை பெற்ற அனைவர்க்கும் வழங்கப்பட்ட உரிமை, அடிப்படை உரிமை. ஆனால், தமிழ் நாடு சட்டமன்ற விதிகளில் 3-வது விதியின்படி, சட்டசபைக் கூட்டத்திற்கான அழைப்பாணை உறுப்பினர்க்கு அனுப்பப் பெறவேண்டும் என்பது, அரசியல் சட்டம் 105 மற்றும் 194 பிரிவுகளின்கீழ், உறுப்பினர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கும் பாராளுமன்ற உரிமை (Parliamentary Privilege) ஆகும்.

அடிப்படை உரிமை வழங்கும் பிரிவுகள் உட்பட உள்ள அரசியல் சட்டத்தின் எந்தப் பிரிவுகளையும் திருத்தலாம் என்ற அரசியல் சட்டத்து 24-வது திருத்தம் அரசியல் சட்டம் 32வது பிரிவின் கீழ், தன் அடிப்படை உரிமையை நிலைநாட்டிக் கொள்ள, உச்ச நீதிமன்றம் செல்லலாம் என ஒரு குடிமகனுக்கு வழங்கியிருக்கும் உரிமையை வேண்டுமானால் செல்லதி தக்கதல்லதாக ஆக்கியிருக்கலாம். ஆனால், அரசியல் சட்டம் 105 மற்றும் 194 பிரிவுகள் நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே வழங்கியிருக்கும் பாராளுமன்ற அதிகாரம், உரிமை, சட்டப்பாதுகாப்பு(Powers, Privileges and immunities of Parliament and its members) ஆகியவற்றைச் செயலற்றதாக்கும் உரிமை, அந்த 24-வது திருத்தத்திற்கு வழங்கப்படவில்லை.

அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் பாராளுமன்ற உரிமைகளைப் பறிக்கும் எந்தத்திருத்தத்தையும் அரசியல் சட்டம் அனுமதிக்காது. ஆகவே, தன்னுடைய பாராளு

மன்ற உரிமைக்கு ஊறு நேர்ந்தபோது, அதைப் போக்கிக் கொள்ள, தன் பாராளுமன்ற உரிமையை நிலை பெறச் செய்துகொள்ள, ஒரு சட்டமன்ற உறுப்பினர், நீதிமன்றம் செல்வதற்கு எந்தச் சட்டமும் குறுக்கே நிற்க இயலாது.

அரசியல் சட்டத்து 105 மற்றும் 194ஆம் பிரிவுகள் அவை நடவடிக்கைகள் (proceedings of the House) குறித்துத் தான் எந்த நீதிமன்றமும் கேள்வி கேட்கக் கூடாது என நீதிமன்றங்களுக்குத் தடை விதித்துள்ளனவே அல்லாது, ஓர் உறுப்பினரின் பாராளுமன்ற உரிமை பறிபோனது பற்றி விசாரிக்கக் கூடாது எனத் தடை விதிக்கவில்லை.

திரு. வி. கே ராசு, திரு. மதுராந்தகம் ஆறுமுகம், திரு. ஆபிரகாம் ஆகியோர்க்கு நேர்ந்திருப்பது பாராளு மன்ற உரிமை இழப்பு. அதற்குப் பரிகாரம் காண நீதி மன்றம் செல்ல அம்மூவருக்கும் உரிமை உண்டு; அவர் கள் முறையீட்டை ஏற்று தீர்ப்பு வழங்க நீதிமன்றங்களுக் கும் உரிமை உண்டு.

இந்த இரு உரிமைகளை, அரசியல் சட்டத்து 105 மற்றும் 194 பிரிவுகளோ அரசியல் சட்டத்து எந்தத் திருத்தமோ பறிக்கும் உரிமை பெற்றவை அல்ல.